3rd November 1965]

*248 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பிச்சிவாக்கம் கிராமத்தில் உள்ள விதைப் பண்ணைக்குரிய நிலங்கள் எத்தனை ஏக்கர்?

(இ) அங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகள் யாவை? அப் பண்ணைக்காக இன்னும் அதிகமாக நிலங்கள் வாங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(உ) இதுவரையிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 100 ஏக்கர் புறம்போக்கு நிலம்.

(இ) 1964-65-ம் ஆண்டில் இந்தப் பண்ணையில் கீழ்க் கண்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன:

(i)	(1) நிலக்கடலை	T.M.V. 2.
	(2) கொள்ளு	CO I.
	(3) வரகு	CO I.

(ii) இப்பண்ணையின் பரப்பளவைத் தற்போது விரிவாக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

(உ) 21—8—1963 முதல் 21—3—1964 வரை ரூ. 10,112.14.
1—4—1964 முதல் 31—3—1965 வரை ரூ. 49,056.83.

திரு. எஸ். ஜே. ராமசாமி: அந்தப் பண்ணையில் கடலைக்காய் விதை எவ்வளவு உற்பத்தியாகிறது? அது லாபத்தில் வேலை செய்கிறதா அல்லது நஷ்டத்தில் வேலை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: இப்பொழுது தான் 'ட்யூப் வெல்ல்' போடப்பட்டிருக்கின்றன. தற்சமயம் அதிக லாபம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உருளைக்கிழங்கு பயிர் செய்தல்

*249 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1965--66-ம் ஆண்டில் நமது மாநில சர்க்காரால் ஸ்காட்லண்டிலிருந்து உருளைக்கிழங்கு விதை இறக்குமதி செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

(உ) அவைகள் எங்கெங்கு யார் யாருக்கு வினியோகிக்கப்பட்டன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 1965 பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் ஸ்காட்லந்திலிருந்து "கிரேட் ஸ்காட்" என்கிற உருளைக்கிழங்கு வகை விதைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

[3rd November 1965

(இ) நூறு டன்கள்.

(உ) இவ்விதைகள் கோல்டன் நெமடோட்ஸ் என்கிற ஒரு வகை உருளைக்கிழங்கு நோயினலும் மற்ற நோய்களாலும் பிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்ததால், அவை உழவர்களுக்கு வழங்கப்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : அப்படி விதை வரவழைக்கப்பட்டு, அது விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் போனதினல் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : நஷ்டம் நமக்குக் கிட்டத்தட்ட ரூ. 94,000 அதாவது ரூ. 0.94 லட்சம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த விதைகள் விநியோகிக்கப்பட வில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அவைகள் அழிக்கப்பட்டனவா அல்லது வேறு யாராவது எடுத்து விவசாயி களிடையே விநியோகித்தார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வேறு யாருக்கும் உபயோகப்படுத்து வதற்குக் கொடுக்கப்படவில்லை. அதை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தால் மேலும் பயிர்கள் வியாதியினல் பாதிக்கப் பட்டு விவசாயிகளுக்கு அதிகமாக நஷ்டம் ஏற்படும் என்று கருதி, அதற்கென்று ஏற்பட்ட அதிகாரிகள் இதைப் பரிசீலனை செய்து, அதை எவர் கையிலும் கிடைக்கும்படி வெளியிடக் கூடாது என்று கருதி, கப்பலில் இருந்தபடியே சமுத்திரத்தில் அந்த விதைகள் கொட்டப் பட்டுவிட்டன.

திரு. இராம. அரங்கண்ணல் : ரூ. 94,000 நஷ்டம் என்பது சாதாரணமான நஷ்டம் இல்லை. அதற்கான காரணம் என்ன என்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டதா ? அதற்குப் பிறகு எடுக்கப் பட்ட நடவடிக்கை ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ' கிரேட் ஸ்காட் ' உருளைக்கிழங்கு விதை வாங்குவதற்கு மத்திய அரசாங்கத்தினடமிருந்து 'ஃபாரின் எக்ஸேஞ்ச்' கேட்டோம். முதலில் ரூ. 2.84 லட்சம் சாங்ஷன் செய்யப்பட்டது. அதற்கு மேல் 100 டன் வாங்கி அபிவிருத்தி செய்யலாம் என்று அரசாங்கம் முதலில் ஆர்டர் கொடுத்தது. 15 டன் ஐயர்லாந்திலிருந்து அனுப்பியிருந்தார்கள். அதை மத்திய அரசாங்கத்து நிபுணர்கள் பரிசீலனை செய்து பார்த்துச் சொல்வதற்கு முன்னலேயே மீதி இருக்கிற விதைகளைக் கப்பலில் ஏற்றிவிட்டார்கள். கப்பலில் வரும்பொழுது பரிசீலனை செய்யப் பட்டதில் எல்லா விதைகளும் பாதிக்கப்பட்டிருந்தது. அதை விவசாயிகளுக்குக் கொடுத்தால், அதனல் பெருத்த நஷ்டம் ஏற்படும், கெடுதிகள் ஏற்படும் என்று நினைத்து அதை உபயோகிக் கக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டதால் அதிகாரிகள் கப்பலில் இருந்தபடியே அந்த விதைகளைச் சமுத்திரத்தில் கொட்டி விட்டார்கள்.